### ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து –

# தமிழ்நாடு முழுவதும் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாலை 4 மணியளவில் நடைபெறுகிறது!

**சென்னை, பிப்.12 -**

**ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் - அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், இன்று (பிப்ரவரி 12 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.**

**இந்த ஆர்ப்பாட்டம் குறித்து - மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-**

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ் நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து தமிழ் நாட்டின் அனைத்து மாநகரங்களில் தலா ஒரு இடத் திலும் மற்றும் கழக ஒன்றியம், நகரம், பேரூர் அள விலும் இன்று **(12.02.2026 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணி** சார்பில் **"மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம்"** நடைபெறும்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட் டிற்கான கல்வி நிதி ரூ.3458 கோடி, நூறு நாள் வேலை திட்ட நிதி ரூ.2000 கோடி, குடிநீர் இணைப்பு திட்ட நிதி ரூ.3,112 கோடி உள்ளிட்ட எந்த நிதியையும் விடுவிக்காமலும் வளர்ச்சி திட்டத்திற்கு ஒரு பைசா கூட ஒதுக்காமலும், தமிழ்நாட்டு மக்களைப் புறக்கணித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டிற்கான நிதியும் இல்லை வளர்ச்சித் திட்டமும் இல்லை என ஒன்றிய அரசு கைவிரித்த போதும் அவர்களது காலில் விழுந்து ஆதரித்துள்ளது அடிமை அ.தி.மு.க.

நிதி மறுப்பு ஒருபுறம் என்றால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, நூறு நாள் வேலையையே இனி இல்லா மல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சட்டத்தை திரும்பப்பெறவோ, அதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவோ செய்யாமல் ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதோடு அமெரிக்காவின் விவசாயம் சார்ந்த பொருட்களை இங்கே இறக்குமதி செய்து விற்க ஒப்புக்கொண்டு நமது விவசாயிகளின் வாழ்வையே கேள்விக்குறியாக்கி உள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ஒரே நேரத்தில் 100 நாள் வேலை ஒழிப்பு சட்டம், விவசாயத்தை அழிக்கும் ஒப்பந்தம் என கிராமப்புற மக்கள் மீது இரட்டை அணுகுண்டு தாக்குதல் நடத்தி உள்ளது ஒன்றிய பாஜக அரசு. இதற்கு உறுதுணை யாக இருந்து துரோகம் செய்து வருகிறது அ.தி.மு.க.

நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம், புது புது சட்டங்கள், ஒப்பந்தங்கள் வழியே மக்களை வஞ்சிப்பது, நம் வளர்ச்சியைத் தடுத்து வீழ்ச்சியில் தள்ள துடிப்பது என அநீதி இழைத்து வரும் ஒன்றிய பா.ஜ.க.வை எதிர்த்தும், அதோடு கூட்டு சேர்ந்து டப்பா எஞ்சின் மூலம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் டெல் லியின் அடிமையாக்கத் துடிக்கும் அடிமை அ.தி. மு.க.வைக் கண்டித்தும் **மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் அனைத்து மாநகரங்களிலும் தலா ஒரு இடத்திலும் மற்ற இடங்களில் கழக நகர, ஒன்றி ய, பேரூர் அளவிலும் கண்டன ஆர்ப்பாட்டம்** நடைபெ றும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருடன் இணைந்து மாவட்டச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்பு களில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பி றப்புகள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அர சையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

இவ்வாறு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

# வெறுப்பைப் பரப்பி, பிரச்சினைகளை உருவாக்கி குளிர்காய நினைக்கும் பா.ஜ.க.!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

**ஒரு கோடியே 30 இலட்சம் மகளிருக்கு மாதந்தோ றும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையாக வழங்குகி றோம்!**

**19 இலட்சத்து 39 ஆயிரம் குழந்தைகளுக்கு காலை உணவும், அரசுப் பள்ளிகளில் படித்து, கல்லூரிக்கு செல் லும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்திலும், மாண வர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்திலும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்று 12 இலட்சம் பேருக்கு வழங்குகி றோம்!**

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதும், முதல் கையெழுத்தாக விடியல் பயணத்தை அறிமுகப்படுத் தினேன். அதில், இதுவரைக்கும், பெண்கள் 880 கோடி பயணங்களும், திருநர்கள் 48 இலட்சம் பயணங்க ளையும், மாற்றுத்திறனாளிகள் 7 கோடி பயணங்களை யும் மேற்கொண்டிருக்கிறார்கள். இதனால், அவர்க ளுக்கு மாதந்தோறும் 800 ரூபாய் வரை மீதமாகிறது!

**ஏராளமான திட்டங்கள்!**

இப்படி,

- இல்லம் தேடிக் கல்வி
- எண்ணும் எழுத்தும்
- ஊட்டச்சத்தை உறுதிசெய்
- மக்களைத் தேடி மருத்துவம்
- இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48.
- நலன் காக்கும் ஸ்டாலின்
- பாதம் காப்போம்
- இதயம் காப்போம்
- கலைஞர் கனவு இல்லம்
- அன்புக் கரங்கள் திட்டம்
- அன்புச் சோலை திட்டம்
- தோழி விடுதி
- குறு சிறு நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாத திட்டம்
- கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கி ணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்
- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்
- உங்களுடன் ஸ்டாலின்
- கலைஞர் கைவினைத் திட்டம்
- மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைத் திட்டம்
- உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளி களுக்கு நேரடி நியமனம்
- முதலமைச்சர் கோப்பை
- அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட் டுத் திட்டம்
- தொல்குடி திட்டம்
- டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங் கள் வழங்கும் திட்டம்
- பேராசிரியர் அன்பழகனார் கல்வி உட்கட்ட மைப்பு மேம்பாட்டுத் திட்டம்
- பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட் டுத் திட்டம்
- அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்
- முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்
- முதலமைச்சரின் கிராமசாலை மேம்பாட்டுத் திட்டம்
- கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினித் திட் டம் என்று ஏராளமான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

இவைகள் எல்லாம் மக்களிடம் பெரிய அளவில் Reach ஆகியிருக்கிறது!

**தி.மு.க. அரசு மீது மக்கள் நம்பிக்கை!**

தி.மு.க. அரசு தொடர்ந்தால் தான், தமிழ்நாட்டின் எதிர்காலம் நன்றாக இருக்கும் என்று மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக் கைக்கு என்றைக்கும் உண்மையாக இருக்க வேண் டும் என்றுதான் நாங்கள் உழைத்துக் கொண்டிருக்கி றோம்.

அதேசமயம், இவ்வளவு நன்மைகள் செய்யக்கூ டிய தி.மு.க. அரசுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படி யெல்லாம் நெருக்கடிகளை கொடுக்கிறது என்பதையும் மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நிதிப்பகிர்வு, வரிப்பகிர்வு, சிறப்புத் திட்டங்கள், இர யில்வே திட்டங்கள் என்று எல்லாவற்றிலும் தமிழ்நாட் டிற்கு அநீதியையும் துரோகத்தையும்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஏன், இப்போது வெளியிட்ட பட்ஜெட்டில்கூட அவர் கள் தமிழ்நாட்டிற்கு செய்தது என்ன? தமிழ்நாட்டிற்கு நன்மை செய்வார்கள் என்று நம்பிதான் கோரிக்கை கள் வைக்கிறோம். ஆனால், பட்ஜெட்டில் தந்தது 'ஜீரோ' தான்! இப்போது, NDA கூட்டணிக்கு அதே ஜீரோவை மக்களும் திருப்பித் தர போகிறார்கள். மக்கள் எல்லா வற்றையும் பார்த்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

நிர்வாக ரீதியாக இந்த அளவுக்கு இடைஞ்சல்கள் கொடுப்பது, ஆளுநரை வைத்தும், அவதூறுகள் பரப் பியும், அரசியல் ரீதியாக சீண்டிப் பார்க்கிறார்கள். ஊழல் கறை படிந்த அத்தனைபேரையும் ஒன்று சேர்த் துக்கொண்டு, பொய்களை பரப்பிகொண்டு, தேர்தலை சந்திக்க வருகிறார்கள். இந்த ஊழல் கூட்டணிக்கு பெயர் டபுள் எஞ்சின். அந்த டப்பா எஞ்சினுடைய இலட் சணத்தை டெல்லி, உத்தர பிரதேசம், பீகார் என்று பல மாநிலங்களில் பார்த்துகொண்டு தான் இருக்கிறோமே?

ஜனநாயக இந்தியாவில், இப்படியெல்லாம் நடக் கும் என்று யாராவது நினைத்துப் பார்த்திருப்போமா... இந்த நிலைமையை தான் இந்தியா முழுவதும் ஏற்ப டுத்த வேண்டும் என்று அவர்கள் நினைக்கி றார்கள். அதற்கு அவர்களுக்கு துணையாக இருப்பது இரண்டு விஷயம். ஒன்று, அடிமைகள் - மற்றொன்று, அவதூ றுகள்.

இதையெல்லாம் பயன்படுத்தி ஜனநாயகத்தின் அத் தனை விழுமியங்களையும் ஒழித்திடவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு நாட்டிலுள்ள ஜனநா யக சக்திகள் நிச்சயம் இடம் கொடுக்கக் கூடாது. தமிழ் நாட்டிற்கு சேரவேண்டிய நிதியையும், நீதியையும் நிச்சயமாக நாங்கள் பெற்றுத் தருவோம். பா.ஜ.க.வின் பாசிச அரசியல் தமிழ்நாட்டில் நிச்சயம், நிச்சயம், நிச்ச யமாக அது எடுபடாது! நிறைவேறாது!

## தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒன்றிய அரசாலேயே மறைக்க முடியவில்லை; மறுக்க முடியவில்லை!

**அடிமைகள் - அவதூறுகள்!**

பா.ஜ.க.வைப் பொறுத்தவரைக்கும், வெறுப்பைப் பரப்பி, பிரச்சினைகளை உருவாக்கி, அதில் குளிர்காய வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

ஒரே ஒரு உதாரணத்தை சொல்கிறேன். தமிழ் நாட்டைப் போலவே, அஸ்ஸாமிலும் இப்போது தேர் தல் வரப்போகிறது. அதற்கு, அஸ்ஸாம் பி.ஜே.பி.யின் சோசியல் மீடியா பக்கங்களில் வீடியோக்களை வெளி யிட்டு வருகிறார்கள். நீங்கள் எல்லோரும் பார்த்திருப் பீர்கள். அதில், அந்த மாநிலத்தைச் சார்ந்த ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் துப்பாக்கியில் குறி வைப்பது போல போட்டிருந்தார்கள். அதுவும் யாருக்கு எதிராக? இப்படிப்பட்ட காட்சியை வைப்பதற்கான துணிச்சல் அவர்களுக்கு எங்கிருந்து வந்தது.


திராவிட மாடல் 2.0வில் தமிழ்நாட்டை காத்து இந் தியாவின் நம்பர்1 மாநிலமாக தொடர்ந்து வளர்த்தெடுப் பது நிச்சயம்!

தமிழ்நாடு வெல்லும்! இந்தியாவிற்கே வழிகாட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.தங்கமுத்து
### பிப்ரவரி 12 (2016)



கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய மாநாடுகளிலும், போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

கழகம் அறிவித்த சட்ட எரிப்பு போராட்டத்தில் பங்கேற்று மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## காரைக்குடியில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை பொதுக் கூட்டம்!

சிவகங்கை, பிப். 12–

தமிழக முதல்வர், கழகத் தலை வர் தளபதி அவர்கள் உத்தரவின்படி இம்மாதம் பிப்ரவரி 1ம்தேதி முதல் 'தமிழ்நாடு தலைகுனியாது' என்ற பரப்புரைக் கூட்டம் 234 சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்று வருகி றது. இதன் தொடர்ச்சியாக 10ம் தேதி செவ்வாய்க்கிழமை காரைக்குடி சட்ட மன்றத் தொகுதி சார்பில் காரைக்குடி யில் உள்ள பாண்டியன் தியேட்டர் திடலில் மாலை 6 மணி அளவில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்பரை பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்டக் கழகச் செயலாளர் கூட் டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் , பொருளாளர் சுப.துரைராஜ், தேவ கோட்டை நகர் கழக செயலாளர் பெரி. பாலா, ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னத்துரை, கே. ஆர்.ஆனந்த், பூபாலசிங்கம், நாகனிரவி, லெ.மு. ரவிச்சந்திரன், நா.நெடுஞ்செழியன், பேரூர் கழகச் செயலாளர்கள் பகுரு தீன் அலி, பிரமையா, பேரூராட்சி மன்றத் தலைவர்கள் கே.எஸ்.கார்த்தி சோலை, கே.எஸ்.சங்கீதா, ஜெ.ராம கிருஸ்ணன், எல்.பாலசுப்பிரமணி யன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா. குணசேகரன் வர வேற்று பேசினார்.

'தமிழ்நாடு தலைகுனியாது' என்ற பரப்புரை பொதுக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி . மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச் சர் கேஆர்.பெரியகருப்பன், முன் னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் காரைக் குடி சட்டமன்றத் தொகுதி பொறுப்பா ளர் நல்ல சேதுபதி, மாவட்ட அவை தலைவர் அ.கணேசன் மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ்ருசோ, தலைமைக் கழக பேச்சாளர் பா. கணேசன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினார்கள். .

மாநகர துணை செயலாளர் மாநக ராட்சி உறுப்பினர் சொ.கண்ணன் நன்றி கூறினார் . இந்த பொதுக்கூட் டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் மாவட்ட சுற்றுச்சூழல் அ ணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்ல பாய், மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயுப்கான், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மாவட்ட தகவல் தொழில்நுட்ப்ணி அமைப்பாளர் சசி வர்ணன், துணை அமைப்பாளர் காளிமுத்துமாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்த மங்கலம் சேது ,, ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார்,மற்றும் மாநகர கழக நிர்வாகிகள் ராம். அன்பழகன், திவ்யா சக்தி, ராஜபாண்டியன், மே. பழனி அப்பன், துரை .நாகராஜன், காரை சுரேஷ் , எஸ். மைக்கேல், கலா காசிநாதன், சுப. ஹரிதாஸ், பிர சன்னா, ராம.சீனிவாசன் எம்.ரவி முன் னாள் மாவட்ட இளைஞரணிஅமைப் பாளர் சீ. ரவி, இளநீர் கடை சிதம்பரம், பன்னீர் ,சேவியர் ,அவைத்தலைவர் சன் சுப்பையா, பொறியாளர் செந்தில் கமார்,இரா.கோ. அரசு ,உதயம் ராசு, லட்சுமி ராஜ கணேஷ், வைரவன், சொக்கலிங்கம், போஸ் குணசேகரன், ஜான் கென்னடி, வழக்கறிஞர் பொன் முடி, மாமன்ற உறுப்பினர்கள் நாச் சம்மை சிவாஜி ,பிலோமினாள், ராணி ஜெய்சங்கர், சத்யா கார்த்திகே யன் ,விஷ்ணு பிரியா பெருமாள், எஸ் பூமிநாதன், மலர்விழி பழனியப்பன், லில்லி திரேஸ், தனம் சிங்கமுத்து, இளைஞரணி சே. தினகரன், ரஞ்சித், பிரசன்னா, நூருல்கனி, மாவட்ட பிரதி நிதி ஓட்டுநர் ரமேஷ், மற்றும் சட்ட மன்ற தொகுதி காரைக்குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் மாநகர நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

பொதுக் கட்டத்திற்கான ஏற்பாடு களை காரைக்குடி மாநகர செயலாளர் ,துணை மேயர் நா.குணசேகரன் தலைமையில் மாநகர கழகநிர்வாகி கள் செய்திருந்தார்கள்..

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிஞர் குடியரசு
### பிப்ரவரி 12 (2002)



"திராவிட இயக்கத்தின் தீப்பொறிக் கவிஞராகவும், எரிமலைக் கனல் உமிழும் எழுச்சிக் கவிஞராகவும் திகழ்ந்தவர். தத்துவக் கவிஞர் குடியரசு.

"என் தலைமையில் பகுத்தறிவுப் பாடல்களை – இன உணர்வுக் கவிதைகளை வழங்கியவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூ ரப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**